**வென்னப்புவ பிரதேச சபை - 2023**

------------------------------------------------------------

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

வென்னப்புவ பிரதேச சபையின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிநிலைமை கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று முக்கியமான கணக்கீட்டு கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கமளித்தல் தகவல்களின் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை அதிகாரசச் சட்டத்தின் 172(1) ஆம் உப பிரிவு மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்திலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையில் உள்ளடக்கப்பட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் எமது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் தரப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களின் தாக்கங்களைத் தவிர்த்து, நிதிக்கூற்றுக்கள் 2023 திசெம்பர் 31 இல் உள்ளளவாறான வென்னப்புவ பிரதேச சபையின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் நிதிச்செயலாற்றல் மற்றும் காசுப் பாய்ச்சல் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்படும் கணக்கீட்டு நடைமுறைகளுக்கு இணங்க உண்மையாக மற்றும் நியாயமாக வெளிப்படுத்துகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்பலை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களை அடிப்படையாகக் கொண்டு நான் நிதிக்கூற்றுக்கள் தொடர்பில் முனைப்பழியுள்ள அபிப்பராயம் வெளிப்படுத்துகின்றேன்.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க என்னால் கணக்காய்வு செய்யப்பட்டது. இக்கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்பு, இந்த அறிக்கையின் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு சம்பந்தமான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் என்ற பகுதியில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் வகையில் என்னால் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வு சான்றுகள் போதியளவானவை மற்றும் பொருத்தமானவை என்பது எனது நம்பிக்கையாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் சம்பந்தமாக முகாமைத்துவத்தினதும் தொடர்புபட்ட நிருவகிக்கின்ற தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க தயாரித்தலும் நியாயமாகச் சமர்ப்பித்தலும் மற்றும் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூய பொருண்மையான பிறழ் கூற்றுக்களற்ற நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு இயலுமான வகையில் தேவையான உள்ளக கட்டுப்பாட்டினைத் தீர்மானிப்பது முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் நடைமுறை சம்பந்தமான பொறுப்பு, நிருவகிக்கின்ற தரப்பினர்களால் ஏற்றுக் கொள்ளப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் பிரதேச சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் சொந்த வருமானங்கள், செலவுகள் சொத்துக்கள், பொறுப்புக்கள் என்பன தொடர்பாக முறையான ஏடுகள் மற்றும் அறிக்கைகள் பேணப்படுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வின் நோக்கெல்லை (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு சம்பந்தமாக கணக்காய்வாளரின் பொறுப்பு)

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள் மோசடி மற்றும் தவறுகளின் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்கள் அற்றவை என்பதற்கான உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ அல்லது கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் அதன் பொருண்மையான தன்மையானது இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் அமுல்படுத்தப்படுகின்ற பொருளாதார தீர்மானம் தொடர்பான ஏற்படுத்துகின்ற தாக்கத்தின் அடிப்படையில் தங்கியுள்ளது.

இலங்கை கணக்காய்வு நியமத்தின் பிரகாரம் கணக்காய்வின் ஒரு பகுதியாக என்னால் கணக்காய்வின் போது தொழில்சார் வெளிப்படைத்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் நடவடிக்கை எடுக்கப்பட்டது. என்னால் மேலும்,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களினால் ஏற்படும் ஆபத்துக்களை இனங்காண்பற்கும் மதிப்பீடு செய்வதற்குமாக சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு அமுல்படுத்தப்பட்டன. பிழையாகக் காட்டுவதன் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ்கூற்றுக்களிலிருந்து இடம்பெறுகின்ற தாக்கங்களை விட மோசடிகளால் இடம்பெறுகின்ற தாக்கங்கள் பாரியதாக இருப்பதானது தவறான கூட்டிணைவால், போலி ஆவணங்களைத் தயாரிப்பதனால், வேண்டுமென்றே விட்டுவிடுவதனால், பிழையாகக் காட்டுவதனால் அல்லது உள்ளகக் கட்டுப்பாடுகளைத் தவிர்ப்பதனால் ஆகிய காரணங்களினால் ஏற்படுவதினாலாகும்.

- உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கமல்லாதிருந்தும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளைத் திட்டமிடும் வகையில் உள்ளகக் கட்டுப்பாடுக்ள மீதான அறிவு பெற்றுக் கொள்ளப்பட்டது.

- பயன்படுத்தப்படுகின்ற கணக்கீட்டு கொள்கைகளின் பொருத்தத் தன்மை, கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்தன்மை, முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளின் வெளிப்படுத்தல்கள் என்பன மதிப்பீடு செய்யப்பட்டன.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடங்கங்களுக்கா அடிப்படையாகக் கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளன எனவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் மதிப்பீடு செய்யப்பட்டது.

இயலுமான வகையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்பவருனவற்றை பரீட்சிப்பதற்காக கணக்காய்வு நோக்கொல்லை விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்களைச் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது பிரதேச சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள் நடைமுறைகள், பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாகவும் பேணிச் செல்லப்படுகின்றதா எனவும்,

- உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது பிரதேச சபையின் வழங்கப்பட்ட ஏனைய பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க பிரதேச சபையின் நிறுவனம் செயற்படுகின்றதா எனவும்,

- தனது அதிகாரங்கள், கடமைகள், மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா எனவும்,

- வளங்கள் சிக்கனமாகவும், செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டுள்ளதா எனவும் ஆகும்.

## 1.5 ஏனைய சட்டரீதியான தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தில் பின்வரும் தேவைப்பாடுகள் தொடர்பான விசேட ஏற்பாடுகள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

(அ) பிரதேச சபையின் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1) (ஈ) (iii) பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகளின் பிரகாரம் பிரதேச சபையின் நிதிக்கூற்றுக்கள் கடந்த வருடத்தை ஒத்திருந்தன.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(i)(ஈ)(iv) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளின் பிராகரம் கடந்த வருடத்தில் என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் முன்வைக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளது.

## 1.6 நிதிக்கூற்றுக்களை தயாரிப்பது சம்பந்தமான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | செயலாளரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | ரூபா 108,843,509 பெறுமதியான 115 காணிகள் நிலையான சொத்துக்களின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | 2024 ஆம் ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் நிலையான சொத்துக்கள் மூலதனம் என்பவற்றிலிருந்தான வருமானத்திற்கான பங்களிப்பு கணக்கில் செயயப்படும். | நாளேட்டு பதிவுகள் ஊடாக திருத்தம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | முன்னைய ஆண்டு தொடர்பில் ரூபா 66,780 ஆன மிகைக் கணக்காய்வ கட்டண ஒதுக்கீடு மீளாய்வாண்டின் கணக்காய்வு கட்டண ஒதுகீட்டை சிராக்கல் செய்யாமல் கடன்கொடுத்தோர் கணக்கிற்கு சீராக்கப்பட்டிருந்தது. | அடையாளம் காணல் வழக்கு கருத்திற் கொள்கையில் கடன்கொடுத்தோரின் கீழ் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. | -மேற்படி- |
| (இ) | அல்பேட் பீரிஸ் அரங்கமத்தில் இரசாயண களஞ்சிய அறை மீது செலவழித்த தொகை மூலதனமாக்கலில் ரூபா 124,416 ஆல் அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது. | கணக்கீடு செய்யப்பட்ட பெறுமதி திருத்தப்பட்டுள்ளது. | -மேற்படி- |
| (ஈ) | மீளாய்வாண்டில் பூர்த்தியாக்கப்பட்ட ரூபா 15,967,716 பெறுமதியான 07 நிர்மாணங்கள் மூலதனமாக்கப் பட்டிருக்கவில்லை. | 2024 ஆம் ஆண்டின் நிதிக்கூற்றுக்களில் திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | -மேற்படி- |

### 1.6.2 கணக்கிணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | செயலாளரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|
| மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் இரண்டு கணக்கு மீதிகளின் மீதிகள் ரூபா 25,084,176 ஆக இருந்ததுடன் பட்டியலின் பிரகாரம் இது ரூபா 24,850,380 ஆக இருந்தது எனவே ரூபா 344,568 ஆன வித்தியாசம் இருந்தது. | எதிர்காலத்தல் திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | மாற்றங்களிற்கான காரத்தை விசாரணை செய்வதற்கும் திருத்தவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

### 1.6.3 நிகழத்தக்க கணக்குகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | செயலாளரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|
| 2017 முதல் 2023 வரையான நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்ட ரூபா 27,175,869 ஆன பிறபோட்ட பெறவேண்டிய மீதிகளை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | அடுத்தவரும் ஆண்டுகளில் திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | நாளேட்டு பதிவுகள் ஊடாக திருத்தம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

### 1.6.4 கணக்காய்விற்காக எழுத்துமூலச் சான்றுகள் இல்லாமை

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | செயலாளரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|
| மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 30,044,950 கூட்டுத் தொகையான 06 கணக்கு மீதிகள் பௌதீக உளளதன்மை, பட்டியல் மற்றும் வேண்டப்பட்ட தகவல்கள் சமர்ப்பிக்காமையால் கணக்காய்வில் திருப்திகரமாக பரீட்சிக்க முடியாதுள்ளது. | சரியான பட்டியல் சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்ட மீதிகளை உறுதிப்படுத்தவதற்கு ஆவணச் சான்றுகளை சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 1.7 இணக்கமின்மைகள்

### 1.7.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மைகள்

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவ தீர்மானங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் கீழே தரப்படுகின்றன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், என்பவற்றுக்கான தொடர்பு | இணக்கமின்மை | செயலாளரின் கருத்துரை | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச்சட்டம் | | | |
| (i) பிரிவுகள் 129(2) (அ) மற்றும் (உ) | உள்ளுராட்சி சபை பெறவேண்டிய நீதி மன்ற தண்டப்பணம், முத்திரைவரி மற்றும் கடை வாடகை என்பன அறவிடுவதற்கு | முறைப்படி வருமானத்தை சேகரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. | அதிகாரச்சட்டத்திற்கு அமைய செயறப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | | |
| (ii) பிரிவு 143 | சபையின் எல்லக்குள் சகல காணி மற்றும் கட்டிடங்கள் ஒவ்வொரு 05 ஆண்டுகளிற்கும் ஒருதடவை மதிப்பீடு செய்யப்பட வேண்டியதுடன் இதன்படி வரிகள் அறவிடப்பட்டது. | மதிப்படு தொடர்பான நடவடிக்கைகள் செயற்பாட்டில் உள்ளது. | அதிகாரச்சட்டத்திற்கு அமைய செயற்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (iii) பிரிவு 159 | மீளாய்வாண்டு காலத்தின் போது காலாவதியான வியாபார மற்றும் கைத்தொழில் வரிகளிற்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | சிவப்பு அறிவித்தல் வழங்கி நிலுவையாக இருக்கின்ற வாடகைகளை அறவிடுவதற்கு நடவக்கை எடுக்கப்பட்டிருந்தது. | அதிகாரச்சட்டத்திற்கு அமைய செயற்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் செலவை மிகைத்த வருமானம் ரூபா 127,946,180 தொகையாக இருந்ததுடன் அதற்கு நேரொத்ததாக முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவினத்தை மிகைத்த வருமானம் ரூபா 96,054,678 ஆகும்.

### 2.3 வருமான நிருவாகம்

#### 2.3.1 மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் என்பன

சபையால் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம, மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டு தொடர்பாகச் சமர்ப்பிக்கப்பட்ட மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம், நிலுவை வருமானம் என்பன தொடர்பான தகவல்கள் கீழே தரப்படுகின்றன.

| | 2023 | | | | 2022 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| வருமான மூலம் | மதிப்பீடு செய்யப் பட்ட வருமானம் | பட்டியலி டப்பட்ட வருமானம் | சேகரிக்கப் பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறான மொத்த நிலுவை | மதிப்பீடு செய்யப் பட்ட வருமானம் | பட்டியலி டப்பட்ட வருமானம் | சேகரிக்கப் பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறான மொத்த நிலுவை |
| | ரூபா.'000 | ரூபா.'000 | ரூபா.'000 | ரூபா.'000 | ரூபா.'000 | ரூபா.'000 | ரூபா.'000 | ரூபா.'000 |
| வீதவரியும் வரியும் | 17,965 | 18,998 | 15,859 | 7,052 | 19,610 | 20,037 | 16,005 | 9,531 |
| வாடகை | 30,027 | 35,649 | 35,537 | 2,856 | 36,642 | 31,134 | 28,698 | 3,987 |
| உத்தரவுப் பத்திரக் கட்டணம் | 4,065 | 5,087 | 5,087 | 479 | 4,290 | 3,817 | 3,817 | 264 |
| ஏனைய வருமானம் | 19,445 | 21,100 | 13,945 | 7,142 | 17,823 | 17,703 | 8,782 | 7,360 |
| மொத்தம் | 71,502 | 80,834 | 70,428 | 17,529 | 78,365 | 72,691 | 57,302 | 21,142 |

### 2.2.2 வருமானங்களை சேகரிக்கும் செயலாற்றல்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | செயலாளரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 6,874,378 தொகையான மதிப்பீட்டு வரி நிலுவைகள், ரூபா 35,876 தொகையான ஏக்கர் வரிகள் மற்றும் ரூபா 2,865,567 தொகையான வாடகை நிலுவைகள் என்பன அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை | நிலுவையாக இருக்கின்ற பணத்தொகையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கபபட்டிருந்தது. | நிலுவையாக இருக்கின்ற வருமானத்தை அறவிடுவதற்கு உடனடியாக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு சபைக்கு கிடைக்க வேண்டிய நீதி மன்ற தண்டப்பணம் மற்றும் முத்திரை வரி என்பன முறையே ரூபா 221,923,591 மற்றும் ரூபா 66,714,364 என்பன மாகாண சபை பிதம செயலாளர் மற்றும் உரிய அதிகாரிகளிடமிருந்து அறவிட வேண்டியிருந்ததுடன் அவற்றில் 01 ஆண்டிற்கு குறைவான நீதி மன்ற தண்டப் பணம் ரூபா 62,836,287 ஆகவும் 05 ஆண்டுகளிற்கு மேலானவை ரூபா 3,878,077 ஆகவும் இருந்தது. | எதிர்காலத்தில் இந்த நிலுவையாக இருக்கின்ற தொகை முறையாக அறவிட இயலும். | நிலுவை நீதி மன்ற தண்டப்பணம் மற்றும் முத்திரை வரி என்பன விரைவாக அறவிடப்பட வேண்டும். |

### 2.3 மிகைக் கட்டணம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | செயலாளரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|
| 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச் சட்டத்தின் 172(3) ஆம் பிரிவு மற்றும் 2018 பெப்ரவரி 15 ஆந் திகதிய கடிதம் உள்ராட்சி ஆணையாளர் (வடமேல்) இன் 02/09/01/01 A.C. 2006 ஆம் இலக்க கடிதம் என்பவற்றின் பிரகாரம் ரூபா 326,355 ஆன தொகை உரிய நடவடிக்கைளிற்கு பொறுப்பான உத்தியோகத்தரிடமிருந்து அறவிட வேண்டியிருந்தது. | மிகைக் கட்டணங்களை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றன. | மிகைக் கட்டணங்களை அறவிடு தொடர்பில் உடனடியாக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | செயலாளரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | 2019 ஆம் ஆண்டிலிருந்து CAT-2020 கணனி முறைமை பொருத்தவதற்கு ரூபா 1,164,086 செலவழிக்கப்பட்டிருந்ததுடன் 2020 ஆண்டிற்கு ரூபா 949,800 உம் 2023 ஆம் ஆண்டிற்கு ரூபா 214,286 உம் செலுத்தப்பட்டிருந்ததுடன் முறைமையில் இருந்த பல் குறைபாடுகள் காரணமாக அறிக்கைகள் பெறுவது சாத்தியமற்றிருந்ததுடன் தற்பொது வரை அறவ்வினை திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | CAT-2020 கணனி முறைமை குறைபாடுகளை திருத்தவதற்காக வேண்டுகை செய்யப்பட்டிருந்தது. | குறைபாடுகளை திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | 2022 நவம்பர் 25 ஆந் திகதிய 2308 ஆம் இலக்க இலங்கை சனநாயக சோசலீச குடியரசு வர்த்தமாணி அறிவித்தல் பிரகாரம் வியாபார அனுமதி பத்திரங்களிற்கான கட்டணம் 2023 மார்ச் 31 இற்கு மன்னர் சேகரிக்கப்பட வேண்டும் 30 அமைப்புக்களிற்காக வியாபார அனுமதிப்பத்திர கட்டண அறவீடு கோவையிடப்பட்டிருக்காததுடன் செயற்பாடுகள தொடங்கப்பட்டிருக்கவில்லை. | சுகாதார வைத்திய அதகாரி அலுவலத்தின் தாமதம் காரணமாக அனுமதிப்பத்திர கட்டணம் அறவிட முடியாதிருந்தது. | வருமானங்களை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (இ) | டெங்கொட்டுவ உப அலுவலகத்திற்கு சொந்தமான கடைகளின் குத்தகை தொடர்பான உடன்படிக்கையின் 20 ஆவது உட்பிரிவு பிரகார் நீர் பட்டியல் குத்தகையாளரால் செலுத்தப்பட வேண்டிய போதிலும் ரூபா 237,770 ஆன நீர் பட்டியல் நீர் அளவை மாணி செயற்படாமையால் சபையால் செலுத்தப்பட்டிருந்தது.. | மின்சார பட்டியல் மாத்திரமே எங்களால் செலுத்தப்படும். | குத்தகையாளரிடமிருந்து அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஈ) | இலங்கை சனநாயக சோசலீச 2022 நவம்பர் 25 ஆந் திகதிய இலங்கை சனநாயக சோசலீச குடியரசு வர்த்தமாணி அறிவித்தலின் பகுதி IV(ஆ) இன் பிரகாரம் 2023 ஆம் ஆண்டு சேவை ஏற்பாடுகள் தொடர்புபட்ட கட்டண தயாரிப்பு தொடர்பில் சபையின் அனுமதி இல்லாமல் தவைல் டொங்கட்டுவ நகர மண்டபம் 49 நாட்களிற்காக ஜயபொடி விளையாட்டு குழுவிற்கு வழங்கப்பட்டிருந்ததுடன் கட்டணம் | மண்டபம் கூடியளவு கட்டணத்துடன் வழங்கப்பட்டிருந்தது. | வர்த்தமாணி பிரகாரம் செயற்டுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | ரூபா 410,000 சாட்டுதல் செய்யப்பட வேண்டும். | | |
| (உ) | 2013 இன் 01 ஆம் இலக்க வடமேல் மாகாண சபைகளினுடைய நியதிகள் மூலம் சமுதாய அடிப்படை அமைப்புகளின் பதிவு மற்றும் மேற்பார்வை அந்த பகுதியின் உள்ளூராட்சிக்கு ஒப்படைக்கப்பட்டது ஆனால் சபை 15 சமுதாண அடிப்படை அமைப்புக்களை இனங்கண்டிருந்ததுடன் அவற்றில் வட மேல் மாகாண நீர் வழங்கல் மற்றும் சுற்றாடல் சுகாதார பிரிவில் 14 இனை சபை பதிவு செய்திருக்வில்லை. | பதிவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | சமுதாய அடிப்படை அமைப்புகளை பதிவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஊ) | 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு சபையால் பெறவேண்டிய கணக்குகளின் பெறுமதி ரூபா 87,097,297 ஆக இருந்ததுடன் அதில் ரூபா 1,680,316 ஆன மீதி 05 ஆண்டுகளிற்கு மேலாக இருந்தது. | பதில் வழங்கப்பட்டிருக்கவில்லை | நிலுவைகளை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (எ) | 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு சபையால் செலுத்த வேண்டிய கணக்குகளின் பெறுமதி ரூபா 135,248,449 ஆக இருந்ததுடன் அதில் ரூபா 10,000,000 ஆன மீதி 05 ஆண்டுகளிற்கு மேலாக தீர்க்கப்படாது இருந்தது. | டொங்கொட்டுவ ஆரம்ப பாடசாலை கட்டிட நிர்மாணத்திற்காக ஒதுக்கப்பட்ட கடன்கொடுத்தோர் மீதியாக மேற்குறிப்பிட்ட 05 ஆண்டுகளிற்கு மேலான மீதி இருந்தது. | கடன்கொடுத்தோரை உடனடியாக தீர்ப்பகவு செய்யப்பட வேண்டும். |

## 3.2 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | செயலாளரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | 70 கடை வாடகைகளிற்காக 1994 இல் கைச்சாத்திட்ட உடன்படிக்கை 2023 வரையும் நாளது வரையாக்கப்பட்டிருக்கவில்லை. | குறைபாடுகள் திருத்தப் பட்டுள்ளதுடன் மீள் ஒப்பந்தமிடல் நடைமுறை செயற்பாட்டில் உள்ளன. | உடன்படிக்கைகள் நாளது வரையாக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | 29 கடைகளிற்காக கைச்சாத்திட்ட ஒப்பந்த உடன்படிக்கைகளில் தொடங்கும் திகதி மற்றும் முடிவடையும் திகதி குறிப்பிடப்பட்டிருக்கவில்லை. | குறைபாடுகள் திருத்தப் பட்டுள்ளதுடன் மீள் ஒப்பந்தமிடல் நடைமுறை செயற்பாட்டில் உள்ளன. | உடன்படிக்கைகள் நாளது வரையாக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (இ) | 2023 செப்தெம்பர் 12 இல் உள்ளவாறு 41 கடைகளிற்காக ஒப்பந்தங்கள் கைச்சாத்திடப் பட்டிருக்கவில்லை. | மதிப்பீட்டின் பிரகாரம் உ்ன்படிக்கைகள் தயாரிக்கப்படுவதுடன் இதன்படி கடைகள் வழங்கப்படும். | உடன்படிக்கைகள் நாளது வரையாக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஈ) | 2018 யூலையிலிருந்து 13 கடைகள் பட்டியலிடல் நிறுத்தப்பட்டிருந்துன் ஆளுநரின் அனுமதியுடன் | மேலும், கடைகள் குத்தகைக்கு விடுவதற்காக ஒழுங்குகள் செய்யப்படுகின்றன. | கடைகள் குத்தகைக்கு விடுவதற்காக |

| | | |
|---|---|---|
| நிலுவையாளர் பதிவேட்டிலிருந்து அகற்றப்பட்டிருந்த அந்த 13 கடைகள் குத்தகைக்கு விடப்பட்டிருக்கவில்லை. | | ஒழுங்குகள் செய்யப்பட வேண்டும். |

### 3.3 சச்சரவுத் தன்மையான கொடுக்கல் வாங்கல்கள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | செயலாளரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|
| ஒள்ளுராட்சி அதிகாரச்ச்டத்தின் 12(1) ஆம் பிரிவின் பிரகாரம், பொதுப் பேரவை பல்வெறு பணிகளிற்காக பொது வசதிகள் அபிவிருத்தி மற்றும் இடர் முகாமைத்துவ குழுவால் செய்யப்பட்ட முறையான பரிந்துரைகளை ஏற்றிருந்ததுடன் 2010 ஆம் ஆண்டிலிருந்து 2023 யூலை வரை வீதி விளக்குகள் போடுதல் மற்றும் அணைத்தல் படிகளாக ரூபா 741,000 ஆன கொடுப்பனவை மூன்று நபர்களிற்கு செய்திருந்தது. | கொடுப்பனவு நடைமுறை நிறுத்தபப்ப்ட்டது. | அதிகாரச்சட்டத்தின் பிரகாரம் செயற்பட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

### 3.4. சொத்துக்கள் முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | செயலாளரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | சபையால் உடமையாக்கப்பட்ட 23 அரங்ககங்கள் மற்றும் அவற்றினுடைய ஆதனங்கள் என்பவற்றின் உள்ளதன்மை தொடர்பில் உறுதிப்படுத்தல்கள் பெறப்பட்டிருக்கவில்லை. | அளவை நடாத்தப்பட்டிருந்ததுடன் நாளது வரையாக்கல் தொடங்கப்பட்டிருந்தது. | ஆதனங்களின் உரிமையை உறுதிப்படுத்தவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | 07 இறைச்சிக்கடை மற்றும் மீன் கடைகள், 02 மலசலகூடங்கள், ஒரு சைக்கிள் தரிப்பிடம் மற்றும் 09 தென்னை உற்பத்தி காணிகள் என்பவற்றிலிருந்து பெறவெண்டிய வருமானத்தை அறவிடவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | குத்தகைக்கு விடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்ட பொதிலும் குத்தகையாளர் குத்தகை வசதியை ஏற்றிருக்கவில்லை. | வருமானத்தை சேகரிப்பதற்கு சொத்துக்களை குத்தகைக்கு விடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (இ) | அலுவலகங்கள், பொது சந்தைகள், ஆரம்ப பாடசாலைகள், நூலகங்கள், சனசமூக நிலையங்கள் மற்றும் சுடுகாடுகள் போன்றன உள்ளடங்கலாக சபையினுடைய எல்லைக்குள் 99 கோரப்படாத ஆதனங்ள் இருந்தன. | சகல ஆதனைங்களையும் கையேற்பதற்கு சகல ஒழுங்குகளும் செய்யப்படும். | உரிய ஆதனங்களின் சட்ட உரிமையை கைறேப்பதற்கு அவசர நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஈ) | 12 காணகளின் சந்தைப் பெறுமதி மதிப்பிடப்பட்டு குறிப்பிடப்பட்டிருக்கவில்லை. | சந்தை பெறுமதியை மதிப்பிடுவதற்கு நடவடிக்கை எடுக்கபட வேண்டியதுடன் இது கணக்கிற்கு எடுக்கப்படும். | நாளேட்டு பதிவுகள் மூலம் திருத்தங்கள் செய்யப்பட வேண்டும். |

## 3.5 ஒப்பந்த நிருவகத்திலுள்ள குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | செயலாளரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | நயனமண்டம, சென் அந்தோனி மாவத்தை அடையாளமிடுவதற்கு ரூபா 1,116,748 இற்காக வெளிவாரி கம்பனியொன்றிற்கு உப்பந்தம் வழங்கப்பட்டிருந்ததுடன் இந்த வீதி முன்னரே காபற் இடப்பட்டிருந்தது ஆனால் குண்டும் குழியுமாக இருந்தது. மொத்த வீதியின் நீளம் 110 மீற்றராக இருந்ததுடன் அகலம் 38 மிமீ ஆக இருந்த 2.7 மீற்றராக இருந்ததுடன் இது 18 மிமீ கல் பதிப்பதற்கு மதிப்பிடப்பட்டதுடன் வீதி முதலாவது, இரண்டாவது மற்றும் இடைக் கோடடில் என்பனவாக தாரிடப்பட்டது. ஆனால், முழு வீதிக்கும் கல் பதிப்பதற்காக செலுத்தப்பட்ட ரூபா 82,914 ஆன தொகை மேலதிக கொடுப்பனவாக இருந்தது. | பதில் வழங்கப்பட்டிருக்கவில்லை. | சரியான மதிப்பீடு தயாரித்து பரிசொதித்த பின்னர் கொடுப்பனவுகள் செய்யப்பட வேண்டும். Payments should be made after preparation and inspection of accurate estimates. |
| (ஆ) | சங்கா கட்டிடக்காரர்களுடன் தும்மலகொட்டுவ, ரணவிறு நெவில் பிரியந்த வீதி திருத்தவதற்கு ஒப்பந்தம் வழங்கப்பட்டிருந்ததுடன் ரூபா 408,296 மதிப்பிடப்பட்ட பெறுமதியாக இருந்ததுடன் முடிவுறுத்தப்பட்ட வேலை பெறுமதி ரூபா 370,470 ஆக இருந்தது. வேலை மதிப்பிடப்பட்டதை விட குறைவாக பூர்த்தியாக்கப்பட்டிருந்தது. | பதில் வழங்கப்பட்டிருக்கவில்லை. | தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டு பிரகாரம் வேலைகள் பூர்த்தியாக்கப்பட வேண்டும். |

## 3.6 மனித வள முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | செயலாளரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | (i) 12 இரண்டாம் நிலை பதவிகள் மற்றும் 19 ஆரம்ப நிலைப் பதவிகள் வெற்றிடமாக இருந்ததுடன் ஆயர்வேத வைத்தியர் பல ஆண்டுகளாக நிறைவேற்றுதர பதவிக்காக ஒப்பந்த அடிப்படையில் வேலைகு அமர்த்தப்பட்டிருந்தார். | உள்ளுராட்சி ஆணையாளர் திணைக்களம் வெற்றிடங்கள் நிரப்புவது தொடர்பில் அறிவித்திருந்தது. | சபைக்கு தேவையான ஊழியர் எண்ணிக்கை சரியாக இனங்கண்டு அனுமதி பெறுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| | (ii) மீளாய்வாண்டின் போமு சபையானது அமைய மற்றும் ஒப்பந்த அடிப்படையில் 118 ஊழியர்களை வேலைக்கமர்த்தியிருந்ததுடன் சபை நிதிகளிலிருந்து ரூபா 54,769,427 ஆன தொகை செலவழிக்கப்பட்டிருந்தது. | அவசியமான அனுமதிகளை கோருவதற்கு நடவடிகைகை எடுக்கப்பட்டிருந்தது. | ஊழியர் எண்ணிக்கை அனுமதி பெறுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | சேவையை விட்டு விலகிய 20 ஊழியர்களிடமிருநது பெறவேண்டிய ரூபா 725,391 ஆன தொகை அறவிடப்பட்டிருக்கவில்லை. | கடன் தொகை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. | ஊழியர் கடன்களை அறவிடுவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

**3.7 வாகனத் தொகுதியின் முகாமைத்துவம்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | செயலாளரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (ஆ) | உள்ளூராட்சி சபையால் பயன்படுத்தப்பட்ட கப் வாகனங்கின் உரிமையாண்மை சபைக்கு கையளிக்கப்பட்டிருக்கவில்லை. | கையேற்பதற்கு வேண்டுகை செய்யப்பட்டிருந்தது. | சபைக்கு உரிமையாண்மையை கையளிப்பதற்கு ஒழுங்குகள் செய்யப்பட வேண்டும். |
| (ஆ) | முறையான மதிப்பீட்டின் கீழ் இரண்டு உழவு இயந்திரங்கள் பயன்பாட்லிருந்து அகற்றி கைதவிர்ப்பதற்கு பரிந்துரைக்கப் பட்டிருந்ததுடன் உள்ளூராட்சி ஆணையாளர் திணைக்களம் அந்த இரண்டு உழவு இயந்திரங்களை மதிப்பீட்டிற்கு அனுப்புவதற்கு ஒழுங்குகள் செய்திருக்கவில்லை. | மதிப்பீட்டு சபையால் அறிக்கை வழங்கப்பட்டிருக்கவில்லை. | மதிப்பீட்டை பெறுவதற்கு ஒழுங்குகள் செய்யப்பட வேண்டும். Arrangements should be made to obtain an assessment. |

**4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்**

**4.1 வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டம்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | செயலாளரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | செயல் நடவடிக்கை திட்டத்தில் குறிப்பிடப்பட்ட 15 வித்தியாசமான பணிகளை நிறைவேற்றுவதற்கு ரூபா 2,576,128 ஆன தொகை செலவழிக்கப்பட்டிருந்த போதிலும் எதிர்பாரத்த பூர்த்தியாக்கல் மட்டத்தை அடைந்திருக்கவில்லை. | ஒதுக்கப்பட்ட ஏற்பாடுகள் முழுவதும் செலவழிக்க்ப்பட்டிருக்காத போதிலும் பூர்த்தியாக்கல் மட்டம் அடையப்பட்டிருக்கவில்லை. | செய்நடவடிக்கை திட்டத்தின் பிரகாரம் செயற்பட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | சபையால் தயாரிக்கப்பட்ட நான்கு ஆண்டு திட்டம் மற்றும் செயல்நடவடிக்கை திட்டத்தின் பிரகாரம் நானகு ஆண்டு திட்டத்தில் 2023 ஆம் ஆண்டு தொடர்பில் மேற்கொள்ள வேண்டுமென எதிர்பார்க்கப்பட்ட அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்கள் 2023 ஆம் ஆண்டு செயல் நடவடிக்கை திட்டத்தில் உள்ளடக்கப் பட்டிருக்கவில்லை. | நான்கு ஆண்டு திட்டத்தில் உள்ளடக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | நான்கு ஆண்டு திட்டத்தின் பிரகாரம் மேற்கொள்வதற்கு எதிர்பார்த்த அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்கள் செயல் நடவடிக்கை திட்டத்தில் உள்ளடக்கப்பட வேண்டும். |

## 4.2 பாதீட்டுக் கட்டுப்பாடு

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | செயலாளரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | 09 செலவின தலைப்புகள் தொடர்பில் பாதீட்டு மதிப்பீட்டில் ரூபா 497,000 ஆக தொகை ஏற்பாடு செய்யப்பட்ட போதிலும் மீளாய்வாண்டின் போது பாதிடப்பட்ட பணிகளை அடைவதற்கு முழு ஏற்பாடுகளும் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. | முழு ஒதுக்கீட்டு தொகையும் செலவழிக்கப்பட்டிருக்காத சந்தர்பங்கள் இருந்தன. | பாதீட்டு இலக்குகளை அடைவதற்கு உரிய வழியில் செயற்பாட்டு நடவடிக்கைகள் திட்டமிடப்பட வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டு தொடர்பில் 10 செலவின தலைப்புகளிற்காக செய்யப்பட்ட ஒதுக்கிட்டின் 50 சதவீதம் செலவழிக்கப்பட்டிருந்தது. | செலவின தலைப்புகளின் கீழான ஏற்பாடுகள் செலவழிக்கப்பட்டிருக்கவிலை. | பாதீட்டு இலக்குகளை அடைவதற்கு உரிய வழியில் செயற்பாட்டு நடவடிக்கைகள் திட்டமிடப்பட வேண்டும். |

## 4.3 சுற்றாடல் பிரச்சினைகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | செயலாளரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | 2023 ஆம் ஆண்டிற்கு முன்னர் பொது மக்கள் முறைப்பாடுகளிற்காக பதிவேடு பேணப்பட்டிருக்காததுடன் முறைப்பாடுகள் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் வெளிப்படுத்த முடியாதிருந்ததுடன் 2023 ஆம் ஆண்டில் 102 பொது மக்கள் முறைப்பாடுகள் பெறப்பட்டிருந்ததுடன் அவற்றில் 14 நடவடிக்கை எடுககப்படாது இருந்தது. | பதிவேடு ஒழுங்காகவும் சரியாகவும் பேணப்பட்டிருந்தது என அறிவிக்கப்பட்டிருந்துது. | முறைப்பாடுகள் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கையை வெளிப்படுத்தவதற்கு பதிவேடு பேணுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | (i) 120 கைத்தொழில்களின் சுற்றாடல் அனுமதி பத்திரத்தின் உத்தரவாத காலப்பகுதி 2021 ஆண்டிலிருந்து சுற்றடல் அனுமதிப்பத்திரம் பெற்றிருக்காததுடன் சபையானது வருமானத்தை இழந்திருந்ததுடன் இது தொடர்பில் அவசியமான நடவடிக்கைகள் எடுககப்பட்டிருக்கவில்லை. | கைத்தொழிலாளர்களிற்கு நினைவுட்டல் கடிதங்கள் அனுப்பப்பட்டது. | சுற்றாடல் அனுமதி பத்திரத்தின் பெறுவதற்கு கைத்தொழிலாளர்களை நெறிப்படுத்தப்பட வேண்டும். |
| | (ii) 1990 இன் 12 ஆம் இலக்க வடமேல் மாகாண சுற்றாடல் நியதியின் 21(1) ஆம் பிரிவின் கீழ் வழங்கப்பட்ட கழிவு பரிசோதனை / கழிவகற்றல் என்பவற்றிற்காக சுற்றாடல் பாதுகாப்பு அனுமதியின் பொது நிபந்தகைளின் பிரகாரம் அனுமதிப் பத்திரங்கள் புதுப்பிப்பதற்கான விண்ணப்பம் அனுமதிப்பத்திரம் காலாவதியாவதற்கு ஒருமாதம் முன்னர் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென குறிப்பிடப்பட்டிருந்தது. அனுமதிப் பத்திரம் புதுப்பிப்பதற்கான விண்ணப்பம் அனுமதி பத்திரத்தின் | வருகைதராத கைத்தொழிலாளர்களிற்காக நினைவுட்டல் கடிதங்கள் அனுப்பப்பட்டது. | நியதியின் பிரகாரம் செயற்பட வேண்டும். |

உத்தரவாக காலப்பகுதி முடிவடைவதற்கு முனனர் ஒரு மாதத்திற்குள் செய்யப்பட வேண்டும். 33 நிறுவனங்கள் அவ்வாறு செய்யப்பட்டிருக்கவில்லை.

## 4.4 நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | செயலாளரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
| --- | --- | --- |
| சபையானது 17 நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை இனங்கணடிருந்ததுடன. 2023 ஆ ஆண்டிற்காக அந்த இலக்குகளை அடைவதற்கு 56 நடவடிக்கைகளை அமுலாக்குவதற்கு திட்டமிட்டது. அந்த 41 நடவடிக்கைகளன் முன்னேற்றம் 05 சதவீதத்திற்குத் 98 சதவீதத்திற்கும் இடையிலான வீச்சில் இருந்தது. | சதவீதத்திலுள்ள மாற்றங்கள் பரிந்துரைகள் பெற்ற பின்னர் அமுலாக்கப்பட்ட நிகழ்ச்சித் திட்டத்தின் முன்னேற்றத்தை குதைத்தமையால் நிகழ்ந்நதது. | நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை அடைவதற்கு ந்வடிக்கை எடுக்க வேண்டும். |